IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.
C.C NO.72/2026

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SATHISH |
| FATHER'S NAME | : | RAMESH |
| VILLAGE | : | KALANPATTARAI |
| OCCUPATION | : | GR I PC |
| AGE | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JULY2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருவலம் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 12.03.2026 ம் தேதி காலை 08.00 மணிக்கு நானும், உதவி ஆய்வாளர் மஞ்சுநாதன், தலைமை காவலர் பார்த்தீபன் ஆகியோர் ரோந்து பணி மேற்கொண்டு திருவலம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு, குற்ற தடுப்பு, மதுவிலக்கு, கஞ்சா மற்றும் குட்கா சம்மந்தமாக கண்காணித்து கொண்டு போகும்போது கிடைத்த தகவலின் பேரில் ஏரந்தாங்கல் பனந்தோப்பு கிராம ஆர்ச்சிடம் சென்று பார்க்க ஒரு நபர் சந்தேகப்படும்படியாக கையில் பையுடன் நின்று கொண்டிருந்தவர் போலிசாராகிய எங்களை கண்டதும் தப்பி ஓட எத்தனித்தவரை நாங்கள் போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்த போது அவர் பெயர் விலாசம் பாபு, த/பெ. அப்பாசாமி, ஏரந்தாங்கல், காட்பாடி தாலுக்கா என்று கூறினார். மேலும் அவர் வைத்திருந்த பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் தலா 180மிலி அளவு கொண்ட BLACK PEARL RUM-08 பாட்டில்கள், GOLDEN EAGLE BRANDY-02 பாட்டில்கள் என மொத்தம் 10 பாட்டில்கள் இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு மதுபான கடையிலிருந்து ஏற்கனவே வாங்கி வந்து அரசு அனுமதியின்றி தனது சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் எதிரியிடமிருந்து தலா 180மிலி அளவு கொண்ட BLACK PEARL RUM-08 பாட்டில்கள், GOLDEN EAGLE BRANDY-02 பாட்டில்கள் ஆகியவற்றை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியமாக கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து பாரவசம் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

ரோந்து பணிக்கு ஏரந்தாங்கல் பனந்தோப்பு ஆர்ச் என்ற இடத்திற்கு சென்றோம். சம்பவ இடத்தில் பொதுமக்கள் சென்று வருவார்கள் என்றால் சரிதான். எதிரியிடமிருந்து 180மிலி அளவு கொண்ட BLACK PEARL RUM–08 பாட்டில்கள், GOLDEN EAGLE BRANDY–02 பாட்டில்கள் என மொத்தம் 10 பாட்டில்கள் கைப்பற்றினோம். பையை கைப்பற்றினோம் என்றால் வெள்ளை கலர் பையை கைப்பற்றினோம். உண்மையில் கைப்ப்றறி இருந்தால் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும், நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து கைப்பற்றும் போது வீடியோ பதிவு எடுக்கவில்லை. கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் தயார் செய்தோம். கைப்பற்றுதல் மகஜர் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். உதவி ஆய்வாளரின் மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த சங்கதியை இப்போது தான் முதன்முதலில் நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடக்கவில்லை என்றும் பொய் சொல்கிறேன் என்றும், உயர் அதிகாரி கேட்டு கொணடதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.
C.C NO.72/2026

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | PARTHIBAN |
| FATHER'S NAME | : | SESACHALAM |
| VILLAGE | : | MOONJURPAT |
| OCCUPATION | : | HC |
| AGE | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JULY2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருவலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 12.03.2026 ம் தேதி காலை 08.00 மணிக்கு நானும், உதவி ஆய்வாளர் மஞ்சுநாதன், முதல்நிலை காவலர் சதீஷ் ஆகியோர் ரோந்து பணி மேற்கொண்டு திருவலம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு, குற்ற தடுப்பு, மதுவிலக்கு, கஞ்சா மற்றும் குட்கா சம்மந்தமாக கண்காணித்து கொண்டு போகும்போது கிடைத்த தகவலின் பேரில் ஏரந்தாங்கல் பனந்தோப்பு கிராம ஆர்ச்சிடம் சென்று பார்க்க ஒரு நபர் சந்தேகப்படும்படியாக கையில் பையுடன் நின்று கொண்டிருந்தவர் போலிசாராகிய எங்களை கண்டதும் தப்பி ஓட எத்தனித்தவரை நாங்கள் போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்த போது அவர் பெயர் விலாசம் பாபு, த/பெ. அப்பாசாமி, ஏரந்தாங்கல், காட்பாடி தாலுக்கா என்று கூறினார். மேலும் அவர் வைத்திருந்த பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் தலா 180மிலி அளவு கொண்ட BLACK PEARL RUM–08 பாட்டில்கள், GOLDEN EAGLE BRANDY–02 பாட்டில்கள் என மொத்தம் 10 பாட்டில்கள் இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு மதுபான கடையிலிருந்து ஏற்கனவே வாங்கி வந்து அரசு அனுமதியின்றி தனது சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் எதிரியிடமிருந்து தலா 180மிலி அளவு கொண்ட BLACK PEARL RUM–08 பாட்டில்கள், GOLDEN EAGLE BRANDY–02 பாட்டில்கள் ஆகியவற்றை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியமாக கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து பாரவசம் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்ய உறுதுணையாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

ரோந்து பணிக்கு உதவி ஆய்வாளர் மஞ்சுநாதன், முதல்நிலை காவலர் சதீஷ் ஆகியோருடன் பனந்தோப்பு ஆர்ச் அருகே சென்றோம். சம்பவ இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். வழக்கு சொத்தாக 180மிலி அளவு கொண்ட BLACK PEARL RUM–08 பாட்டில்கள், GOLDEN EAGLE BRANDY–02 பாட்டில்கள் என மொத்தம் 10 பாட்டில்கள் கைப்பற்றினோம். பையை கைப்பற்றினோம் என்றால் சரிதான். சமபவம் உண்மையில் நடந்திருந்தால் பையை கைப்பற்றி இருப்போம் என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜர் காவல்நிலையத்தில்வைத்து தயார் செய்யப்பட்டது எனறால் சரியல்ல. சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டது. மகஜர் தட்டச்சு செய்யபட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மடிக்கணினியில் விசாரணை அதிகாரியால் தயார் செய்யப்பட்டது. இந்த சங்கதியை முதல்முறையாக நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடக்கவில்லை என்றும், உயர் அதிகாரி கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 15.07.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU
Date: 2026.07.15 17:16:55 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.